பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 01 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- யாழ்ப்பாணம் கலாச்சார மையத்திற்கு திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டிருப்பது, இந்திய - இலங்கை மக்களின் ஒற்றுமைக்கு சான்றாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா விஜயவாடாவில் இன்று தேசிய பேரிடர் மீட்புப் படையின் 20வது நிறுவன தின விழாவில் பங்கேற்கிறார்.
- விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- உலக பொருளாதாரத்தின் பெரும் தூணாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று சிங்கப்பூர் அதிபர் திரு. தர்மன் சண்முக ரத்னம் கூறியுள்ளார்.
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று வெஸ்ட் இண்டீசை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

யாழ்ப்பாணம் கலாச்சார மையத்திற்கு திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டிருப்பது, இந்திய - இலங்கை மக்களின் ஒற்றுமைக்கு சான்றாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த மையத்திற்கு திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டிருப்பதை வரவேற்றுள்ளார்.

இந்த நடவடிக்கை இந்தியா - இலங்கை மக்களிடையேயான ஆழமான கலாச்சார, மொழி வரலாற்று ரீதியான மற்றும் நாகரிக பிணைப்புகளுக்கு சான்றாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கலாச்சார மையத்திற்கு திருவள்ளுவர் பெயர் சூட்டும் நிகழ்ச்சியில் இலங்கை அரசின் புத்த சாசன மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. **Santjha,** வடக்கு மாகாண ஆளுநர் திரு. **Sunil Senevi,** மற்றும் இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் இன்று தேசிய பேரிடர் மீட்புப் படையின் 20வது நிறுவன தின விழாவில் பங்கேற்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 10வது பட்டாலியன் வாளகம், தென்பிராந்திய வளாகம் மற்றும் **Supaul** பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மையம் உள்ளிட்ட சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளை உள்துறை அமைச்சர் தொடங்கி வைக்க உள்ளார்.

திருப்பதியில் மாநில அரசின் மண்டல தடய அறிவியல் மையத்தையும் திரு. அமித் ஷா தொடங்கி வைக்க உள்ளார்.

பின்னர் ஹைதராபாதில் தேசிய காவல்துறை அகாடமியின் ஒருங்கிணைந்த உள்ளரங்க துப்பாக்கி சுடும் பயிற்சி தளத்திற்கும் அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

இந்த பயிற்சிதளம் சுமார் 27 கோடி ரூபாய் செலவில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் பரவி வரும் மர்ம நோய்க்கான காரணங்களைக் கண்டறிய அமைச்சகங்களுக்கு இடையிலான உயர்மட்டக் குழுவை அமைக்க மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உத்தரவிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சக அதிகாரிகள் தலைமையிலான இக்குழுவில், சுகாதாரம், வேளாண்மை, நீர்வளம் மற்றும் ரசாயன உரத்துறை அமைச்சகங்களைச் சேர்ந்த நிபுணர்கள் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு உதவியாக கால்நடை பராமரிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் தடய அறிவியல் ஆய்வக நிபுணர்கள் செயல்படுவார்கள் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இக்குழு பாதிக்கப்பட்ட கிராமத்திற்கு இன்று நேரில் சென்று ஆய்வு செய்து உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதுடன், பிற பகுதிகளுக்கு இந்த நோய் பரவுவதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தில்லியில் போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் 14ஆம் தேதி சண்டிகரில் நடைபெறும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்ய சட்ட ரீதியான உத்தரவாதம் அளிக்கக் கோரி போராட்டம் நடத்தி வரும் விவசாய சங்கத் தலைவர் திரு. **Dallewal** உடன் மத்திய வேளாண் அமைச்சக இணைச் செயலாளர் திரு. **Priyaranjan** நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இதுவரை 7 கோடியே 72 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் யாத்ரீகர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர்.

நேற்று இங்கு புனித நீராடிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இந்த கும்பமேளா உலகின் மிகப்பெரிய ஆன்மிக நிகழ்ச்சியாக அமைந்துள்ளது என்று கூறினார்.

மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையில் கும்பமேளாவுக்கான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட திரு. ராஜ்நாத் சிங், இது ஒரு வரலாற்றுச் சாதனையாக அமையும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதனிடையே பிரயாக்ராஜில் மத்திய ஜல்சக்தி அமைச்சகம் சார்பில் கங்கை தூய்மைப் பணியை விளக்கும் சிறப்பு அரங்கம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கில் கங்கை ஆற்றை தூய்மையாக பராமரிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நவீன தொழில்நுட்பத்தில் பார்வையாளர்களுக்கு விளக்கப்படுகிறது.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

இது பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கும் இந்த ஆண்டின் முதலாவது மன் கி பாத் நிகழ்ச்சியாகும்.

<<<<>>>>

உலக பொருளாதாரத்தின் பெரும் தூணாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று சிங்கப்பூர் அதிபர் திரு. தர்மன் சண்முக ரத்னம் கூறியுள்ளார்.

தமது ஐந்து நாள் இந்திய பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் புறப்படும் முன் புவனேஸ்வரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா உலகின் பல்வேறு செயல்பாடுகளிலும் முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

ஏற்றுமதி பொருளாதாரத்தில் மிகப்பெரிய வளர்ச்சியடையும் திறன் கொண்ட நாடாக இந்தியா உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் மக்கள் தொகை மற்றும் வளர்ச்சிப் பணிகள் காரணமாக அடுத்த 10 முதல் 20 ஆண்டுகளுக்கு உலக அரங்கில் இந்தியா முக்கிய இடத்தை வகிக்கும் என்றும் திரு. தர்மன் சண்முக ரத்னம் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இஸ்ரேலுக்கும் – ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையிலான அமைதி ஒப்பந்தம் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதையொட்டி நாட்டு மக்களிடையே உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு, இந்த உடன்படிக்கை ஏற்பட உதவியதற்காக அமெரிக்காவின் தற்போதைய அதிபர் திரு. ஜோ பைடன் மற்றும் புதிய அதிபராக பொறுப்பேற்க உள்ள திரு. டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பினர் முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எனினும் பிணைக் கைதிகளின் பட்டியலை வழங்காவிட்டால் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் என்றும் திரு. பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி முதற்கட்டமாக 33 பிணைக் கைதிகள் ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பஞ்சாப், ஹரியான, தில்லி, உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் இன்று அடர் பனிமூட்டம் நிலவக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், மேற்குவங்க மாநிலத்தின் இமயமலையை ஒட்டிய பகுதிகள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் வரும் 21ஆம் தேதி வரை இதே நிலை நிலவக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா மற்றும் மாஹே பகுதிகளின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா மற்றும் மாஹே-யின் சில இடங்களில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்று கூறியுள்ள வானிலை மையம், குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளில் மணிக்கு 35 முதல் 45 கிலோ

மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

<<<>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று வெஸ்ட் இண்டீசை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டி நண்பகல் 12 மணிக்கு தொடங்குகிறது.

உலகக்கோப்பை கோகோ போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆடவர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் 62-42 என்ற புள்ளிக் கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

மகளிர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் 66-16 என்ற புள்ளிக் கணக்கில் இந்தியா - தென்னாப்பிரிக்காவை வென்றது.

<<<>>>>

பிரான்சில் நடைபெற்று வரும் உள்ளரங்க வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் **Rishab Yadav** மற்றும் **Jyoti Sureka Vennam** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<>>>>

வதோதராவில் நடைபெற்ற விஜய் ஹசாரே ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கர்நாடக அணி 36 ரன் வித்தியாசத்தில் விதர்பான அணியை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் கோவா அணி - ஈஸ்பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

கோவாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஹைதராபாத் - பெங்களூரு அணிகளுக்கு இடையேயான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் டிரா ஆனது.

கேரளா – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணிகளுக்கு இடையேயான மற்றொரு ஆட்டம் கோல் ஏதுமின்றி சமனில் முடிந்தது.

**<<<<The End>>>>**